மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No. 30/2022

2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 17–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | (Dw1) கலாதேவி | க/பெ. | : | புல்லாணிமுத்து |
| ஊர் | : | பட்டிணம்காத்தான், இராமநாதபுரம் | வயது | : | 51 |
| சமயம் | : | இந்து | தொழில் | : | துணை வட்டாட்சியர் |

<u>நாள். 17.06.2026</u>
<u>பி.வா.சா. 1</u>

<u>முதல் விசாரணை :–</u>

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ஆவேன். 2, 3ம் பிரதிவாதிகள் எனது மக்கள் ஆவார். எங்கள் அனைவரது சார்பிலும் நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும்.

எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்கிறேன்.

1. 08.09.2010ல் எனது மக்களான 2, 3 பிரதிவாதிகளுக்கு என்னை கார்டியனாக காண்பித்து எனது தகப்பனார் நாகமுத்து எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அசல் பி.வா.சா.ஆ,2,

2. 16.04.1993ல் நத்தம் நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர் அவர்கள் எனது தாத்தா முத்து மகன் மாரியப்பன் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா அசல் பி.வா.சா.ஆ,3,

3. 15.11.2010ல் இராமேஸ்வரம் வட்டாட்சியர் அவர்களால் எனது மக்களான 2, 3 பிரதிவாதிகள் பெயரில் கொடுக்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் பி.வா.சா.ஆ,4,

4. சர்வே எண் 211/9 பி சொத்திற்கு எனது மக்களான 2, 3 பிரதிவாதிகள் பெயரில் கொடுக்கப்பட்ட கம்யூட்டர் பட்டா 10(1) மற்றும் வரைபடம் பி.வா.சா.ஆ,5,

5. சர்வே எண் 211/9 பி1 சொத்திற்கு எனது மக்களான 2, 3 பிரதிவாதிகள் பெயரில் கொடுக்கப்பட்ட கம்யூட்டர் பட்டா 10(1) மற்றும் வரைபடம் பி.வா.சா.ஆ,6

6. சர்வே எண் 211/9 ஏ சொத்திற்கு எனது உடன்பிறந்த சகோதரர்கள் பெயர்களில் கொடுக்கப்பட்ட கம்யூட்டர் பட்டா 10(1) மற்றும் வரைபடம் பி.வா.சா.ஆ,7,

7. 17.12.2021 ல் சர்வே எண் 211/9 பி1 சொத்து சம்பந்தமாக இராமேஸ்வரம் வட்டாட்சியரால் கொடுக்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு பி.வா.சா.ஆ,8,

8. 16.10.2019 ல் எனது சகோதரர்கள் பெயர்களில் சர்வே எண் 211/9 ஏ சொத்திற்கு கொடுக்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் பி.வா.சா.ஆ,9

9. எனது தகப்பனார் நாகமுத்து என்பவரின் வாரிசு சான்றிதழ் அசல் பி.வா.சா.ஆ.10,

10. எனது தகப்பனாரான நாகமுத்து என்பவர் தாவாச் சொத்திலுள்ள வீட்டிற்கு 2003 முதல் 2009 முடிய உள்ள காலங்களுக்கு செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் மொத்தம் மூன்று பி.வா.சா.ஆ,11,

11. எனது மக்களான 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் தாவாச்சொத்திலுள்ள வீட்டிற்கு 2011 முதல் 2026 வரை உள்ள காலங்களுக்கு செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் மொத்தம் 12 பி.வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிதரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.06.17 14:16:34 +0530